DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No.55/2022**

Deposition of witness for Prosecution அ.சா.7

Name : பேபிஉமா
Father/ Husband Name : சசிக்குமார்
Village :
Taluk :
Calling :
Age :

1 முதல் 4, 6 எதிரிகள் ஆஜர். 5ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 25.11.2025.

( இந்த சாட்சி பதிவானது காணொலி காட்சி வழியாக மாண்புமிகு. மயிலாடுதுறை மாவட்ட நீதிமன்றத்தில் சாட்சி ஆஜராகி காணொலி காட்சி வழியாக விசாரித்து பதிவு செய்யப்பட்டது)

<u>**முதல்விசாரணை:-**</u> சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019-2021 வரை தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 15.08.2020ம் தேதி தேவகோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த ராகினி என்பவரிடம் தட்டச்சு செய்து வைத்திருந்த புகார் மனுவை பெற்று காவல் நிலையம் வந்து 14.50 மணிக்கு தேவகோட்டை நகர் காவல் நிலைய குற்ற எண்.268/2020 இதச பிரிவுகள் 147, 148, 294(b), 323, 448, 506(2) மற்றும் 4 of TNPHW Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தும் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். **(மேற்படி' மாதிரி வரைபடம்' அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )** பின்னர் சம்பவ இடத்தில்

சாட்சிகளை விசாரித்தும் வழக்கினை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்த ராகினி என்பவரின் உடல் நிலை குறித்து அவரின் காயத்தின் தன்மை குறித்து அரசு மருத்துவர் திருமதி. மனோசிந்தியா அவர்களிடம் காயத்தின் தன்மை குறித்து கேட்டறிந்தும் அவர் சாதாரண காயம் என்று சான்றிதழ்கள் வழங்கியதையும் பெற்று வழக்கின் இறுதி அறிக்கையினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. காவல் நிலையத்திற்கும் அரசு மருத்துமனைக்கும் இடையில் 2 கட்டிடங்கள் தான் உள்ளது என்றால் சரிதான். அரசு மருத்துவமனையிலோ அல்லது அதற்கு அருகிலோ தட்டச்சு செய்யும் இடங்கள் இல்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் புகார் தாரரிடம் புகார் பெறும் போது வாக்குமூலம் எதுவும் விசாரித்து பதிவு செய்தேனா என்றால் புகார்தாரர் அவருடைய மகன் தட்டச்சு செய்து கொண்டு வந்த புகாரில் கையெழுத்து போட்டு என்னிடம் கொடுத்தார். வழக்கின் எதிரிகள் சம்பவத்தன்று அ.சா.1, அ.சா.2 மற்றும் சிலர் மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் நினைவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை சுற்றி அதிகமான வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

2. அரசு மருத்துவரை பார்த்து விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேனா என்றால் மருத்துவரிடம் எந்த வாக்குமூலமும் வாங்கவில்லை. 14.08.2020-ம் தேதி இரவு 08.00 மணியளவில் சம்பவம் நடந்ததாக புகார் வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 15.08.2020-ல் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை 18.08.2020-ல் தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் சாட்சிகள், ஆவணங்கள் அனைத்தும் 15.08.2020-ல் பதிவு செய்யப்பட்டு 15.02.2022-ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வழக்கின் இறுதி அறிக்கை 02.03.2021-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நான் 15.06.2021-ம் தேதி பணிமாறுதலாகி சென்றுவிட்டேன், அதன்பிறகு இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் வழங்கியுள்ளார்கள்.

3. நான் சொல்வது போல் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் புகார்தாரரின் மகன், மருமகள் மற்றும் குடும்பத்தார்கள் எதிரி ஜோதிகாவை அடித்து காயப்படுத்தியது சம்பந்தமாக புகார் கொடுக்கப்பட்டு

அங்கிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் , சாட்சிகளின் வாக்கு மூலங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்
தேவகோட்டை.